**13.07.2023**

**அ.வ.எண். 583/2014**

**<u>பி.சா.1 சதாசிவம் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

1. 2ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகும் போது எனக்கு 30 வயது. திருமணம் ஆனதிலிருந்து நான் சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். திருமணம் ஆவதற்கு முன்பு சுமார் 14 வருடங்களாக நான் சென்னையில் வசித்து வந்தேன். எனக்கு 2 மகன்கள், 1 மகள் என்றால் சரிதான். எனது மகள் பெயர் பச்சையம்மாள் என்றாலும், மகன்கள் பெயர் ராஜா, ஸ்ரீதர் என்றாலும் சரிதான். எனது மகன் ராஜாவிற்கு தற்போது 37 வயது. ஸ்ரீதருக்கு தற்போது 32 வயது.

2. நான் 1973ம் வருடத்திலிருந்து மண்ணெண்ணை வியாபரம் செய்து வந்தேன். எப்பொழுது மேற்படி மண்ணெண்ணை வியாபாரத்தினை விட்டேன் என்று என்னால் சொல்லமுடியாது. 1990ம் வருடம் முதல் மேற்படி வியாபாரம் செய்து வந்தேன் என்றால் சரிதான். அதற்கு பிறகு நான் கூலி வேலை செய்தேன். எனது மனைவி ஆதிலட்சுமி எப்பொழுதும் வேலைக்கு சென்றதில்லை. எனது மனைவிக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் இல்லை என்றால் சரிதான்.

3. 1ம் வாதி எனது மாமனார் என்றால் சரிதான். எனது மகன் ராஜா சுமார் 10 வருடங்களாக வேலைக்கு செல்கிறார். எனது மகன் ஸ்ரீதர் சுமார் 5 வருடங்களாக வேலைக்கு செல்கிறார். எனது மாமனார் கோவிந்தசாமிக்கு காசியம்மாள், எனது மனைவி ஆதிலட்சுமி, முனியம்மாள் , வேண்டாவரம், பழனி மற்றும் பச்சையப்பன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 2ம் வாதி பழனி மற்றும் 6ம் பிரதிவாதி பச்சையப்பன் ஆகியோர்கள் எனது மாமனாரின் மகன்கள் என்றால் சரிதான்.

4. 6ம் பிரதிவாதி சிறுவயதில் இருந்து என்னுடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி எனது மகள்கள் பச்சையம்மாளை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். 1ம் வாதி 2016ம் வருடம் இறந்தார் என்றால் சரிதான். அவர் ஊரில் இறக்கும் வரை நல்ல உடல்நிலையுடன் இருந்தார் என்றால் சரிதான். அவர் இறக்கும் வரை விவசாயம் செய்துவந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1ம் வாதிதான் மேற்பார்வை செய்து பயிர் வைத்து வந்தார் என்றால் சரிதான்.

5. 2ம் வாதியும் 1ம் வாதியுடன் சேர்ந்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் 3ஏக்கர் 68 செண்டு. பி.சா.ஆ.3னை கோவிந்தசாமி எதற்காக எழுதிக்கொடுத்தார் என்றால் என்னிடம் பணம் வாங்கி

கொண்டு எழுதிக்கொடுத்தார். பி.சா.ஆ.3 எழுவதற்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நான் பணம் கொடுத்தேன். எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. (வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)